[12th September 1959

அகதிகளுக்கு மறுபடியும் திட்டங்கள் தீட்டி அவர்களுடைய புனர்வாழ்வுக்கான நடவடிக்கைகளை எடுக்க இந்த சர்க்கார் முன் வருவார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சிபாரிசுகளைச் செய்யும்போது எல்லா சிபாரிசுகளும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்று எதிர்பார்ப்பது சரியல்ல. அகதிகளுக்கு எவ்வளவோ வசதிகள் அளிக்கப்படுகின்றன. அவைகளை அளிக்க மத்திய சர்க்கார் இணங்கியிருக்கிறது. உத்தியோக விஷயத்திலும், பர்மிட் விஷயத்திலும் ஒத்துக்கொள்ளவில்லையென்றால் மற்ற அகதிகளுக்கும் இதே நிலைதான் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

Dog bites

* 347 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) கோயமுத்தூர் ஜில்லாவில் 1958-59-ல் நாய்க்கடியால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அவர்களில் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை என்ன?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No data regarding dog bites in general is available.

(*b*) 33.

SRI P. G. MANICKAM : நாய் கடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஜில்லா தலைமை ஆஸ்பத்திரியில்தான் போதுமான வைத்திய வசதி செய்யப்பட்டிருக்கிறது. தாலுக்கா தலைமை ஆஸ்பத்திரிகளில் மருந்து இல்லை என்று சொல்லுகிறார்கள். கிராமவாசிகளுக்கு தலைமை ஆஸ்பத்திரிக்குச் செல்ல வசதியும் பண வசதியும் இல்லாது இருப்பதால், தாலுக்கா தலைநகர ஆஸ்பத்திரிகளுக்கு போதுமான மருந்துகள் அனுப்ப கவனம் செலுத்துவார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : முன்பு இதற்கெல்லாம் கூனூருக்குத்தான் போகவேண்டும். இப்போது தலைமை ஆஸ்பத்திரிகளிலும், கூடுமான வரையில் மற்ற ஆஸ்பத்திரிகளிலும் இந்த மருந்து கிடைக்க ஏற்பாடு இருக்கிறது.

Cooum River

* 348 *Q.*—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) how often the Cooum river in the City of Madras is being flushed by letting in sea water;

(*b*) whether it has any salutary effect in eradicating the foul smell emanating from the river;

(*c*) whether there is any proposal to deepen this river to enable the water to flow freely thus preventing stagnation; and

12th September 1959]

(*d*) what steps are taken to prevent dumping or letting in of night soil into this river?

THE HON. SRI P. KAKKAN : (*a*) The Cooum river is not being flushed by letting in sea water directly. But, whenever the water level in Cooum falls below a certain level, sea water is pumped into the Cooum from the harbour. Such pumping was done three times between March and August 1958.

(*b*) Yes, Sir, to some extent.

(*c*) A Technical Committee has been constituted to draw up a scheme to develop Cooum as a clean and tidal river.

(*d*) There is no dumping or letting in of night soil into the river. During peak flow hours, due to the insufficient capacity of the existing sewers, there is overflow of sewage from the Corporation sewage pumping station into the Cooum. A comprehensive drainage scheme prepared by the Corporation of Madras for preventing the overflow of sewage during peak flow hours is at present under examination.

SRI K. VINAYAKAM : சென்னைக்கு வந்த சென்ட்ரல் வாட்டர் அண்டு ஹைவேஸ் கமிஷன் அவர்கள் இந்த கூவம் நதியைப் பார்வையிட்டார்கள். அவர்கள் என்ன சிபாரிசு செய்தார்கள். அதை நடைமுறையில் கொண்டுவர அரசாங்கம் ஏதாவது முயற்சி செய்கிறதா?

THE HON. SRI P. KAKKAN : அந்த தகவல் என்னிடத்தில் இல்லை. இருந்தாலும் ஒரு டெக்னிகல் ஹை பவர் கமிட்டி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த கமிட்டி இப்போது பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. இன்னும் முடிவு தெரியவில்லை.

SRI K. VINAYAKAM : ஸார், இந்த கூவம் நதியை திருத்தி அமைப்பதென்பது மனிதர்களால் முடிந்த காரியமல்ல. அப்படி இருக்கும்போது சென்னையில் இருக்கும் பகுதியை தூர்த்து விட்டு மக்களுக்குப் பயன்படும் அளவுக்கு எலெக்ட்ரிக் டிரேயின் மாதிரி ஏதாவது ஒரு ஸர்விஸ் போட அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது மனிதர்களால் முடியாது என்பது வாஸ்தவம்தான். ஆனால் யந்திரங்களால் முடியும் என்று எதிர்பார்க்கலாம். (சிரிப்பு).

First Grade Judge transferred from Kerala State

* 349 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) 12—6—56-ல் கேரளாவில் முதல் கிரேடு ஜட்ஜாக இருந்தவர் சென்னை ராஜ்யத்தில் இரண்டாவது கிரேடு ஜட்ஜாக இருக்கிறாரா ?